திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அப்படி ஏதாவது இருந்தால், கூறுங்கள் என்று சொன்னார்கள். தனியார் பள்ளிகளில் ஆசிரியர்கள் வேலை இழக்கும் அளவுக்கு, மாணவர்களுக்கு ரெக்கார்ட் ஷீட் கொடுத்து, அந்த ஆசிரியர்கள் அனுப்பப்படுகிறார்கள். டி.ஈ.ஓ., போஸ்டு கொடுத்து அவரை இன்னொரு பள்ளியில் போடலாம் என்று அரசு உத்தரவு இருக்கிறது. இந்த மாதிரி நிலைமை இல்லாத காரணத்தினால், தனியார் பள்ளிகளிலே ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். புதிய பள்ளிகள் திறக்கும் போதும், மாணாக்கர்களுக்கு ரிக்கார்ட் ஷீட் கொடுத்தனுப்புவது போன்ற காரணங்களால், ஆசிரியர்கள் வேலை இழப்பு ஏற்பட்டு பாதிக்கப்படும் நிலைமையில் இருக்கின்றார்கள். இதை நீக்குவதற்கு, ஒரு போஸ்டை எடுத்து இன்னொரு பள்ளிக்குக் கொடுக்கும்போது, அந்த போஸ்டோடு ஆசிரியரையும் அந்தப் பள்ளிக்குச் சேர்த்துப் போடும்படியான உத்தரவை அரசு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் பதில் சொல்லும்போது திருப்பரங்குன்றம் பள்ளியைப் பொறுத்துத்தான் சொன்னேன். அந்தப் பள்ளிக்கு நிபந்தனையின் பேரில்தான் அங்கீகாரம் கொடுத்திருக்கிறோம். மற்ற இடங்களில் ஆசிரியர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டிருந்தால், பரிசீலித்து அதை நீக்குவதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.

Second Grade Tamil Pandits working in Government High Schools.

*6 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether under G.O. Ms. No. 63, Education, dated 17th January 1974 and G.O. Ms. No. 1750, Education, dated 9th October 1974, only Secondary Grade Tamil Pandits working in Private Management Schools, have been raised to the cadre of First Grade Tamil Pandits ;

(*b*) if so, the reason for not extending the same benefit to such Pandits, working in Government High Schools; and

(*c*) whether there is any proposal to rectify this anomaly?

1975 அக்டோபர் 24]

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கல்வித் துறையின் 17—1—1974 நாளிட்ட 63-ஆம் எண் அரசாணை, 9—10—1974 நாளிட்ட 1750 ஆம் எண் அரசாணை ஆகியவற்றின்படி தனியார் நிர்வாகப் பள்ளிகளில் பணியாற்றிவரும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் மட்டுமே, முதல் நிலை தமிழ்ப் பண்டிதர்கள் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனரா ?

(இ) ஆமெனில், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்களுக்கும் அச்சலுகையை நீட்டிக்காததற்கான காரணம் என்ன ?

(உ) இக்குறையைக் களைவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) அரசாணை எண் 63, கல்வி, நாள் 17—1—74 மற்றும் அரசாணை எண் 1750, கல்வி, நாள் 9—10—74-ல் இடப்பட்ட உத்தரவுகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை

Conversion of Sea-water into Drinking-water and Sewage water into Fertilizer.

* 7 *Q.*—THIRU D. V. D. MONTE : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Water Supply and Drainage Board has any proposals to convert sea-water into drinking-water, and sewage water into fertilizer, to minimise river pollution; and

(*b*) if so, the details thereof?